*முன்னே தள்ளு, பின்னே செல்: ஒவ்வொரு சமயத்திலும் ஒரு நபராக சமுதாயத்தை வலுபடுத்துவது*

**<u>மார்னிங் சைட் ஹைட்ஸ் வாலிபர்கள் விளையாட்டு / பொழுது போக்கு கருத்தாய்வு</u>**

**செயலாக்க சுருக்கம்.**

**ஆய்வின் இலக்கு மற்றும் நோக்கங்கள்**

இந்த ஆய்வின் ஒட்டுமொத்த இலக்கானது, மார்னிங்சைட் ஹைட்ஸ் வாலிபர்களை பாதுகாப்பாகவும் மற்றும் செயல்பாட்டுடனும் வைத்திருப்பதாகும். இந்த ஆய்வானது, 3T - நிகழ்ச்சிக்கு உதவுவதற்காக, மார்னிங்சைட் ஹைட்டின் தற்போதைய நிலைமையை பற்றிய கண்ணோட்டங்களை அடையாளம் காண, அங்கு வசிப்பவர்கள் மற்றும் வணிக சமுதாயத்தினரை நோக்கி குறிவைக்கப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கங்கள், பின்வருவனவற்றை அடையாளம் காண்பதாகும்: சமுதாயத்தின் தேவைகள், முக்கியமாக வாலிபர்களின் தேவைகள், சமுதாயத்தின் உறுப்பினர்கள், சமுதாயத்தின் வாலிபர்களின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு சம்பந்தமாக மிகமுக்கியமாக நினைக்கும் மதிப்புகள், முக்கியமானதாக நோக்கப்படும் சமுதாய அடிப்படையின் மீது நடத்தப்படும் செயல்பாடுகளில் உள்ள இடைவெளிகள், மற்றும் மார்னிங்சைட் ஹைட்ஸ்ல் உள்ள வாலிபர்களுக்கான விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளையும், நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்.

**வழிமுறை**

இந்த ஆய்வில் தோராயமாக 150 பதில் கூறிய பலதரப்பட்ட பின்னனியை கொண்ட நபர்கள் பங்கெடுத்து கொண்டனர். இது செய்து முடிக்கப்பட்டு கனடா போஸ்டின் வழியே பெறப்பட்ட ஒரு கருத்தாய்வின் மூலமாக நடத்தப்பட்டது. கருத்தாய்வானது நான்கு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. முன்கூட்டியே பணம் கட்டப்பட்ட ஒரு போஸ்டல் கவரின் மூலம், அங்கு வசிப்பவர்கள் ஆய்வு படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புவதற்கு அல்லது www.3TPrgram.org க்கு சென்று கருத்தாய்வை முடிப்பதற்கும் ஊக்குவிக்கப்பட்டார்கள். கருத்தாய்வு படிவத்தின் வடிவமைப்பானது, எண்ணிக்கை மற்றும் தரத்தின் அடிப்படையிலான இரண்டு தகவல்களையும் பெற்று தந்தது.

## திட்டத்தின் கண்டுபிடிப்புகள்

வசதிகள் இல்லாமை பற்றியும், எதிர்காலத்தில் ஒரு நேர்மறையான விளைவுகளை உண்டாக்க, எல்லா படிகளிலும் உள்ள அரசியல்வாதிகளின் வெளிப்படையான இயலாமையை பற்றியும், வசிப்பவர்கள் பெரும் ஏமாற்றம் கொண்டுள்ளதை கண்டுபிடிப்புகள் குறிப்பறிவிக்கின்றன. பக்கத்து இடங்களில் இருந்து வெளிப்படையான குற்ற குழுக்களின் செயல்பாடுகள் பரவும் ஒரு வளரும் சூழலை பற்றி வசிப்பவர்கள் இடையே வெளிப்படையான பயம் உள்ளது. சமுதாயத்தின் வாலிபர்கள் மற்ற சமுதாயத்தினரிடம் இருந்து சேவைகளை கோர வேண்டிய தேவையும் உள்ளது. மற்ற கண்டுபிடுப்புகளில் இருந்து இந்த ஏமாற்றமானது, சமுதாயத்தில் இரண்டு பள்ளிகூடங்களின் வெளியே கொடுக்கப்பட்டுள்ள, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் / சேவைகள் ஆகியவற்றை பற்றி, பதில் கூறியவர்களில் 52.7% பேர் மிகவும் அதிருப்தி கொண்டுள்ளதாகவும், (34.5%) அல்லது ஓரளவு அதிருப்தி கொண்டுள்ளதாகவும் (18.2%), 24.6% பேர் மிகவும் திருப்தி கொண்டுள்ளதாகவும் (5.5%) அல்லது ஓரளவு திருப்தி கொண்டுள்ளதாகவும் (19.1%) கூறியுள்ளதில் இருந்து வித்தியாசப்படுத்தி காணலாம். வசதிகள் இல்லாமையை பற்றிய வசிப்பவர்களின் எண்ணங்களை பின்வரும் வாசங்களை உள்ளடக்கிய அவர்களின் பதில்கள் வெளிப்படுத்துகின்றன:

- ஒன்றுமே இல்லை, நான் மேற்கொண்டு சொல்ல வேண்டுமா?

- என்ன விளையாட்டு / மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகள்? நமது சமுதாயத்திற்கு வெளியே உள்ள டொரோன்ட்டோ பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகளை தவிர்த்து மிகவும் குறைவாகவே உள்ளது. மால்வெர்ன் மற்றும் சென்டெனியலை தவிர்த்து மற்ற அனைத்து பூங்காகளும் பொழுதுபோக்குகளும் இரண்டு பேருந்துகள் மாறிசெல்ல வேண்டிய தூரத்தில் உள்ளன.

- நடந்தோ/சைக்கிளில் செல்லும் தூரத்தில் எதுவுமே இல்லை. எல்லா இடத்திற்கும் காரிலேயே செல்ல வேண்டி இருந்தால், அது உடற்பயிற்சிக்காக செல்லும் நோக்கத்தை ஓரளவு தோற்கடித்து விடுகின்றது.

- நமது வாலிபர்களை செயல்பாட்டுடனும், ஈடுபாட்டுடனும் இருக்க செய்ய ஒரு சமுதாய கூடம் நமக்கு தேவை.

- ஒன்றுமே இல்லை

- இந்த பக்கத்தில், குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் பயன் அளிக்ககூடிய நிகழ்ச்சிகளை வழங்க எந்த ஒரு பொழுதுபோக்கு வசதியுமே இல்லை.

சமூகத்தை பாதிக்க கூடிய, துப்பாக்கி வன்முறை, குற்ற குழுசெயல்கள், சமூகத்திற்கு எதிராக நடந்து கொள்வது, சுவர்களில் கிறுக்குவது, மற்றும் ஏனைய கதவை உடைத்து வீட்டுக்குள் புகுவது, கொள்ளையடிப்பது, காரை வேகமாக பொறுப்பற்ற முறையில் ஓட்டுவது, தேவைகேற்ப வெளிச்சம் இல்லாமல் இருப்பது போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கிய சூழ்நிலைகளை பற்றி வெளிப்படுத்தப்பட்ட பல கவலைகள் வசிப்பவர்களிடம் உள்ளது.

**பரிந்துரைகளின் சுருக்கம்:**

பின் கொடுக்கப்பட்டுள்ள, கலந்தாய்வில் பதில் அளித்த ஒருவரின் அறிக்கை, மார்னிங்சைட்ஹைட்ஸ்ல் வசிப்பவர்களின் ஆசைகளின் ஒரு மொத்த சுருக்கமாகும்:

''.... மார்னிங்சைட் ஹைட்டில் எங்களுக்கு ஒரு பொழுது போக்கு மையம் வேண்டும். மேலும் குற்றங்கள் நடைபெறும் வரையில் அரசாங்கம் காத்திருக்க போகின்றதா? எங்கு விளையாட்டுகள் நடத்தபடாமல் இருக்கின்றதோ அங்கு மிக அதிகமாக குற்றங்கள் நடைபெறுவதை ஆவணங்கள் காட்டுகின்றன. பெற்றோர்களும் தங்களது குழந்தைகளை பூங்காக்களுக்கு அனுப்ப பயப்படுகின்றனர், அது குழந்தைகளுக்கு ஆபத்தானதாக இருக்கும் என்பதால். விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டால், அந்த வசதிகள் உள்ள இடங்களுக்கு குழந்தைகளை அனுப்புவது பாதுகாப்பானது. தயவு செய்து மார்னிங்சைட்ல் வசிப்பவர்களுக்கு **தயவு செய்து உதவவும்**.''

சமுதாயத்தின் உறுப்பினர்களால் அளிக்கப்பட்ட 5 முன்னனி பரிந்துரைகளை பின்வரும் அறிக்கைகள் உருவகப்படுத்துகின்றன:

| பரிந்துரை | சதவீதம் | பதில் அளித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அனைத்து வயதினருக்கும் ஏற்ற, முக்கியமாக சமுதாயத்தின் வாலிபர்களுக்கு ஏற்ற, நீச்சல் குளம் போன்றவற்றை உள்ளடக்கிய, பலநோக்கம் கொண்ட வசதிகளுடன் கூடிய சமுதாய கூடத்தை உடனடியாக கட்ட வேண்டும். | 98.2% | 111 |
| பள்ளி முடிந்த பின்/ வார இறுதி / கோடை விடுமுறை வாலிபர்கள் விளையாட்டு போட்டி / பொழுது போக்கு நடவடிக்கைகளை பல வயதினருக்கும் அளிக்க வேண்டும். | 92.9% | 105 |
| குழந்தைகள் நல சேவைகளை அளிக்க வேண்டும் | 49.6% | 56 |
| வயது முதிர்ந்தவர்களுக்கு ஒரு சேவை. | 41.6% | 47 |
| ஒரு லாபம் இல்லாத அமைப்பு. | 36.3% | 41 |

குழந்தைகள் குற்ற குழுக்களிடம் சேராமல் இருக்க அவர்களுக்கு நல்ல செயல்பாடுகளை அளிப்பதன் தேவையை சமுதாய உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் எல்லா வயதினருக்குமான, வயது முதிர்ந்தவர்க்கான நூலகம் மற்றும் சேவையை உள்ளடக்கிய, சேவைகள் அளிக்கப்பட வேண்டும், என்பதை குறிப்பிட்டுள்ளனர்.